முதன்மை மாவட்ட நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

OS. 140/2020

2025 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 23 ஆம் நாள் .வா.த.சா 1-ன் வாக்குமூலம்

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிமுறைகளின்படி முதன்மை மாவட்ட நீதிபதி திருமதி. .ஜி.சுபத்திரா தேவி, எம்.எல்., அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுப்புராயலு | வயது | : | 61 |
| தந்தை/கணவர் பெயர் | : | கிருஷ்ணசாமி | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலுக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

என்னுடைய வயது தற்போது 61. கட்டிடத் தொழில் 40 வருடங்களாக செய்து வருகின்றேன். 21 வயதிலிருந்து நான் கட்டிடத்தொழில் வேலை செய்து வருகின்றேன். என்னுடைய சொந்த ஊர் திண்டிவனம். வருமானவரி நான் செலுத்துகிறேன். 2014-2015 ஆண்டிற்கான வருமான வரி செலுத்திய ஆவணம் என்னிடம் உள்ளது. இந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் கேட்டால் நான் தாக்கல் செய்வேன். 2014-2015 வருடத்தில் நான் கட்டிட காண்ரெக்ட் செய்த விவரங்களை நான் ஆவணங்களை பார்த்து தான் சொல்ல முடியும். 2010-2015 வரை என்னென்ன காண்ட்ரெக்ட் செய்தேன் என்ற விவரத்தை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும். 2010-2015 வரை ஆண்டு வருமானம் எவ்வளவு என்று எனக்கு தெரியாது. ஆடிட்டர் கேட்டு தான் சொல்ல முடியும். காண்ட்ரெக்ட் தொழில் செய்வதற்கு சொந்த பணம் மற்றும் வங்கியில் கடன் வாங்கியும் செய்து வருகின்றேன். சொந்தமாக வாங்கிய பணம், கடன் வாங்கிய பணம் குறிப்பாக 2014-2015 வருடத்திற்கு சொல்லமுடியுமா

என்றால் சரியாக நியாபகமில்லை. சுமாராக ஒரு வருடத்திற்கு எவ்வளவு காண்ட்ரெக்ட் செய்வேன் 10, 15 காண்ட்ரெக்ட் செய்வேன். 10, 15 தோரயமாக எவ்வளவு மதிப்பு என்ன என்று சொல்லமுடியுமா என்றால் சொல்லமுடியாது. வருடத்திற்கு எவ்வளவு டேன்ஓவர் என்று தெரியும் என்பதும் எவ்வளவு மதிப்பு என்று தெரியும் என்பதும் வழக்கிற்காக நான் சொல்ல மறுக்கிறேன் என்றால் சரியல்ல. காண்ட்ரெக்ட் தொழில் செய்வதற்கு பணம் பெறுவதற்கு வங்கி கணக்கில் என் பெயரில் உள்ளது. வங்கி கணக்கு 3 கணக்குகள் உள்ளது. குறிப்பாக 2014-2015 வருடத்திற்கு எவ்வளவு வங்கி பணப் பரிவர்தனை தாக்கல் செய்தவற்கு ஆடிட்டர் மூலம் தாக்கல் செய்ய முடியும். வா.த.சா.1 இந்த அக்கிரிமெண்ட் 2013 போடப்பட்டது என்றால் சரிதான். 2013 ஆண்டில் போடப்பட்ட ஒப்பந்தம் 2013 நடைமுறைக்கு வந்தது என்றால் சரிதான். நான் செய்த கட்டிட வேலைக்கான தொகையை ஈடான தொகையை வங்கி கடன் மூலமாக பெற்று தருவதாக ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தில் நிபந்தனை மீறி நடந்தால் அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று உள்ளதா என்றால் ஆமாம். பில்டிங் உள்ளான தொகையை அவர் கொடுத்துவிட்டார். நான் இந்த விவரத்தை என் பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் சரியாக நியாபகமில்லை. வழக்கு முன்னாடி அறிவிப்பு கொடுத்திருந்தேன் அதில் இந்த விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சரியாக நியாபகமில்லை. ஒப்பந்தத்தை பற்றி வழக்கு கோப்பிலும், பிராதிலும், அறிக்கையிலும் சொல்லாததால் வா.தசா.1 ஆவணம் ஏற்புடைய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. அதன் குறித்து எந்த சாட்சியமும் ஏற்புடையது அல்ல என்றால் ஆமாம். முதல் விசாரணையில் நான் கடந்த 40 ஆண்டு காலம் கட்டிடம் கட்டும் தொழிலை செய்து வருவதால் அதற்கு அவர் கட்டுமான பொருட்கள் வாங்க வேண்டும் என்பதாங்ல உடனடியாக வங்கி மூலம் பணம் ஒரே தவணையாக எடுக்க

முடியாது என்பதால் நான் எப்போதும் கைவசம் ரூபாய். 1 கோடி வரை பொருட்களை வாங்க வீட்டில் வைத்திருப்பேன். அந்த தொகையை தான் 1ம் பிரதிவாதிக்கு கொடுத்தேன் என்று முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வருமான வரி கட்டுபவர் என்னிடம் உள்ள தொகைகள் மற்றும் அதுபற்றிய பணப்பரிவர்தனை பற்றி வருமான வரி கணக்கில் காட்டவேண்டும் என்ற கடமை உள்ளதா என்றால் உள்ளது. வா.த.சா.2 அடமான பத்திரம் 17.08.2015 அன்று ஏற்பட்டது என்றால் சரிதான். கடன் தொகையை ரொக்கமாக கொடுத்தாகத்தான் பதிவாகியுள்ளது என்றால் சரிதான். 2015 வருடம் வருமானவரித்துறை, பதிவுத்துறைக்கு பதிவு செய்த பத்திரத்தில் குறிப்பிட்ட தொகையில் 20000 மேல் ரொக்கமாக பெற்றுக்கொண்டதாக பதிவு செய்ததாக அறிவுறுத்திய விவரம் தெரியுமா என்றால் அதுபற்றிய விவரம் எனக்கு தெரியாது. 2015 வருடத்திலிருந்து 20000 மேல் ரொக்கமாக உள்ள பரிவர்தனைகள் பதிவு பத்திரத்தில் பதிவு செய்யப்பட்டிந்தால் அந்த பத்திரத்திற்குட்பட்ட பரிவர்தனையை பற்றி வருமானவரித்துறை ஆய்வு செய்ய அதிகாரம் உள்ளது என்றும் அத்தகைய பதிவுகள் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. இது சம்மந்தமாக உள்ள வருமானவரித்துறை ஆவணங்கள் அனைத்தும் நீதிமன்றத்திற்கு ஆய்வுக்க உட்படுத்தினால் தான் உண்மை கண்டறியப்படும் என்று சொன்னால் என்னுடைய வருமான வரி சான்றிதழ் மற்றும் ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததால் தான் உண்மை நிலவரம் தெரியவரும் என்றால் ஒப்படைக்க தயாராக உள்ளேன். 2020 வருடம் நான் வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம். வழக்கிற்க்கு முன்பாக 10.03.2020 வா.த.சா.9 அறிவிப்பு கொடுத்துள்ளேன் என்றால் அந்த அறிவிப்பு 18.06.2020 பிரதிவாதிகள் அவர்கள் வழங்கறிஞர் மூலமாக மனு கொடுத்தார்கள் அது வா.த.சா.ஆ 12 அந்த பதில் அறிவிப்பில் உள்ளதை நான் படித்து

பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அதில் உள்ள குற்றச்சாட்டுகளை தனித்தனியாக மறுத்து பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் தனித்தனியாக மறுக்கவில்லை ஒரே வரியில் மறுத்துள்ளேன். பதில் அறிவிப்பில் உள்ள குற்றச்சாட்டுகளை நான் ஏன் தனித்தனியாக மறுக்கவில்லை என்றாலும் அதில் உண்மை உள்ளது என்பதால் தான் தனித்தனியாக மறுக்கவில்லை என்றாலும் சரியல்ல. 2020 வழக்கு தாக்கல் செய்த பிறகு பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குரையை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். பிரதிவாதி போட்ட எதிர் வழக்குரையை தனித்தனியாக மறுத்து பதில் வழக்குரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். இதுவரை அதுபோல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கை சிறப்பு பட்டியில் 18.04.2023 பட்டியலிடப்பட்டது என்றால் சரிதான். பிரதிவாதி எதிர் வழக்குரை தாக்கல் செய்யும் போது நான் முறையான கணக்கு வழக்குகளை ஒப்படைக்காதபோது பிரதிவாதி தனது நம்பகத்தன்மையை நிருபிப்பதற்காக 30 லட்சம் ரூபாய்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்தாரா என்றால் சரிதான். 18.04.2023 லிருந்து வழக்கு வரை வாய்தா தேதி சென்ற பிறகும் நான் முதல் விசாரணைக்கு வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. முதல் விசாரணைக்கு வரவேண்டும், இந்த வழக்கை விசாரிக்கவேண்டும் என்று பிரதிவாதி மனு போட்டிருந்தார் என்றால் நான் வந்துள்ளேன். நான் 3 மாதமாக புதிய நீதிபதி வந்ததிலிருந்து நான் வந்துள்ளேன். 2023-2024 ஆகிய வருடங்களில் ஒரு முறை கூட நீதிமன்றத்திற்கு வரவில்லை என்று சொன்னால் வந்துள்ளேன். 2023-2024 நீதிமன்றத்தில் நான் வரவே இல்லை என்று சொன்னால் சரியல்லஇந்த நீதிமன்றத்தில் IA.690/2021 என்ற மனுவை 30 லட்சம் பணத்தை எடுப்பதற்காக மனு செய்தேன் என்றால் சரிதான். இந்த மனு 22.01.2022 நீதிமன்றத்தில் தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். அதன்பிறகு இந்த உத்தரவு

மனுவின் படி உயர்நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த சீராய்வு மனு மூலமாகத்தான் 30 லட்சம் பணத்தை செக் மூலமாக எடுக்க உத்தரவிட்டது என்றால் சரிதான். பிரதிவாதிகள் அவர் எதிர் வழக்குரையில் உள்ள விவரங்களை நிருபிக்க உரிமை உள்ளது என்பதை பதிவு செய்து தான் அந்த உத்தரவு போடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். கட்டிடம் கட்டும் வேலை சம்மந்தமாக எனக்கும், 1 ஆம் பிரதிவாதிக்கும் நேரடியான தொடர்பு உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிக்கு 2015 ல் பெரிய விபத்து ஏற்பட்டது என்றால் அது எனக்கு நியாபகமில்லை. அந்த சமயத்தில் நான் அவருக்கு கவலைக்கிடமான நிலையில் மருத்துவமனையில் இருந்தார் என்றால் கவலைக்கிடமாக இல்லை நான் மருத்துவமனைக்கு போய் பார்த்து வந்தேன். அவர் அடிப்பட்டது எனக்கு தெரிய வந்தது. அவர் பெரிய விபத்து ஏற்பட்டு அது தலைப்பு செய்தியாக வந்தது என்றால் சரிதான். அவர் கவலைக்கிடமாகத்தான் இருந்தார் என்றால் இல்லை. பிரதிவாதியின் சூழ்நிலையை பயன்படுத்திக் கொண்டு இந்த கட்டிட வேலை சம்மந்தமில்லாத பிரதிவாதியின் மனைவி, மகன், மகள் பயன்படுத்திக் கொண்டு ஒரு சம்மத பத்திரத்தை 03.09.2015 வருடம் கட்டாயப்படுத்தி சம்மத பத்திரத்தில் கையெழுத்து வாங்கி கொண்டேன் என்றால் சரியல்ல.

பிரதிவாதி தரப்பில் வேண்டுக்கோளுங்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.